மெய்ஞ்ஞானக்கொடி

# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியவை



**புரட்டாசி மாத வெளியீடு (Sep-Oct 2014)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,115

# மெய்யான இந்துமதம்

காணிக்கை ரூ.10/-

தமிழே கடவுள் மொழி! தெய்வ மொழி!, தேவ மொழி!, வேத மொழி!

# உள்ளுறை

1. **மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த் தேவர் வரலாறு.**
2. **மெய்யான சித்தர் பாடல்கள்.**
3. **குண்டலினி மாயை.**
4. **சிறுமுகை சித்தரடியான் திரு பழ.கோபால் அவர்களுக்கு குருதேவர் எழுதிய திருமுகம்.**
5. **கையெழுத்து பிறதி நூலக அமைப்புக் குருவாணை அஞ்சல்.**
6. **செயல்நிலைத் திருத்த எச்சரிக்கைக் குருவாணை அஞ்சல்.**

(இந்த (5), (6) என்ற எண்ணிட்ட இரு அஞ்சல்களும் விளக்கமாக கையெழுத்துப் பிறதிகளாகவோ, வேறு விதங்களில் நகல்கள் தயாரித்தோ குருதேவர் எழுதிய அஞ்சல்களை, கட்டுரைகளைப் பிறருக்குப் படிக்கக் கொடுக்க வேண்டும் என்பதை குருவாணை இட்டு குருதேவர் வலியுறுத்துவதை எடுத்துக் காட்டுகின்றன. இதன் அடிப்படையிலேயே **பூசையாக, தவமாக, குருகாணிக்கையாக, ... 'இந்து வேதம்' என்ற தலைப்பில் குருதேவர் எழுதியவை பலருக்கும் நகல்களாக அனுப்பப் படுகின்றன**. குருதேவர் எழுதிய அஞ்சல்கள், கட்டுரைகள் உடையவர்கள் அவற்றை நகல்கள் எடுத்து இதுபோல் பலருக்கும் அனுப்புமாறு இந்தத் தருணத்தில் மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.)

# ‘மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த்தேவர் வரலாறு’

## ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’ பிறந்த வரலாறும், ‘பன்னிரு திருமுறைகள்’ பிறந்த வரலாறும்

உத்தமசோழன் நாடாள முதலாம் இராசராசசோழன் ஆட்சிப் பொறுப்புக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்ட காலத்தில் தென்பாண்டி நாட்டு ஆழ்வார்த் திருநகரிலிருந்து ஆழ்வார்களின் பாடல்களை யாழ் மீட்டி இசையோடு பாடிக்கொண்டு வந்த தேவதாசிகள் சரியாக மதிக்கப்பட்டுப் பாராட்டப்படாமல் விடப்பட்டு விட்டனர். அதனால் அவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் தங்கி தங்களுடைய அருளிசைப் பணியைச் செய்ய இயலாமல் போனது.

அவர்கள் கங்கை கொண்ட சோழபுரம் சென்று தங்கி தங்களுடைய அருளிசைப் பணியைச் செய்து வந்தார்கள். அப்பொழுது காட்டுமன்னார் குடியிலிருந்த நாதமுனி அவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் வந்து அந்தத் தேவதாசிகளின் யாழிசையையும் இசைப்பாடல்களையும் கேட்டு மகிழ்ந்தார். இவர் பெருமுயற்சி செய்து அந்தத் தேவதாசிகளிடம் இருந்த ஓலைச்சுவடிகள் அனைத்தையும் சேகரித்தார். அவற்றின் மூலம் பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களில் பெரும்பாலானவை கிடைத்தன. கிடைக்காதவைகளைத் தொகுக்கும் பொருட்டுத் தமிழகம் முழுவதும் இருந்த திருமால் திருப்பதிகளுக்கும், திருமால் பத்தர்களின் இல்லங்களுக்கும் சென்று முழுமையாகத் தொகுத்தார். அப்படித் தொகுத்து முடிப்பதற்கு பதினாறு (16) ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

அவர் தொகுத்தவைகளைத் தஞ்சைப் பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வந்து பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களிடம் ஒப்படைத்தார். அப்படி அவர் பதினோராம் பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களிடம் தமது தொகுப்பு முழுவதையும் ஒப்படைத்ததால் தஞ்சைப் பல்கலைக் கழகத்திலிருந்த பெரும்புலவர்கள் பலரும் ஒருங்குகூடிப் பெருமுயற்சிகளைச் செய்து பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களை வகைப்படுத்தி வரிசைப்படுத்தி **'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாக'** உருவாக்கினார்கள். இந்தத் தொகுதிக்கு எண்ணற்ற நகல்கள் எடுத்து நாடெங்கும் பெரிய விழா கொண்டாடி நாடெங்கும் அனுப்பினார்கள். இந்த விழா தஞ்சைப் பெரிய கோயிலில் முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது.

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்கு இந்த இலக்கியத் தொகுதி பேருதவி புரியும் என்று மிகவும் மகிழ்ந்தார். அதனால், அவர் நாதமுனி அவர்களின் விருப்பப்படி அவர் விரும்பிய பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் செம்பினால் வார்ப்புச் சிலைகளைச் செய்து கொடுத்தார். இவையன்றி ஐம்பொன்னினால் சில சிலைகளும், சில கோயில் கருவறைகளுக்குக் கருவறை மூலவர்களின் சிலையும் தாமே கைப்படச் செதுக்கி அன்பளிப்பாகக் கொடுத்தார். இவையனைத்தும் நாதமுனி அவர்களின் பத்தியால் தமிழ்மொழிக்குக் கிடைத்திட்ட **'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்'** எனும் மிகப்பெரிய கலைச் செல்வத்திற்காக வழங்கப்பட்ட அன்பளிப்புக்களேயாகும்.

இந்தக் கலைச்செல்வங்களும் தோன்ற ஆரம்பித்தது அல்லது தோன்றுவதற்குக் காரணமாக இருந்த இடம் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில். இக்கலைச் செல்வம் முழுமைபெற்று நிறைவுற்று வெற்றி விழாக் கண்ட இடம் தஞ்சைப் பெரிய கோயில். அதாவது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கை கொண்ட சோழபுரத்தில்

ஆரம்பித்துத் தஞ்சாவூரில் நிறைவு பெற்றது, முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போலவே, தஞ்சைப் பெரிய கோயிலில் ஊர் ஊராகச் சென்று வழிபாடு செய்யும் பத்தர்கள் கூட்டத்தார் ஒருமுறை மாலை நேரத்தில் மனமுருகித் தேவாரப் பாடல்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் பாடிக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்திட்ட முதலாம் இராசராச சோழன் அவற்றைக் கேட்டு பெருமகிழ்வு எய்தினான். உடனே, அவன் அப்பாடல்களைப் பற்றிய விசாரணைகளைத் துவக்கினான். அதன் விளைவாகத் தேவாரப் பாடல்கள் அனைத்தையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் தொகுக்க ஆசைப்பட்டான். அம்முயற்சியில் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பதினெண்சித்தர்களின் குருவழி வாரிசுகளில் ஒருவராக வாழ்ந்து வரும் சிதம்பரம் வட்டாரத் திருநாரையூர் பிள்ளையார் கோயில் குருக்கள் குடும்பத்தாரை அணுகுமாறு அறிவுரை கூறினார்.

அதன்படியே முதலாம் இராசராசனும் பெருமுயற்சிகளைச் செய்து கிடைத்த மூவர்களின் தேவாரப் பாடல்களையும் திருவாசகத்தையும் தஞ்சைக்குக் கொணர்ந்தான். ஆனால், அவனுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் நாட்டிலிருந்த சிவனடியார்களின் பாடல்களனைத்தையும் தொகுக்க வேண்டும் என்று ஆசை வந்தது. அதனைக் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களிடம் தெரிவித்தான். அதற்கு அப்பணியின் துவக்க விழாவைத்தான் தங்கள் காலத்தில் செய்ய முடியும் என்றும், அப்பணியின் நிறைவு விழா எப்பொழுது நிகழும் என்று சொல்ல முடியாது என்றும் கூறிச் சிவனடியார்களின் பத்திப் பாடல்களைச் **'சீவநெறித் திருமுறைகள்'** என்ற தலைப்பில் தொகுக்கும் பணியைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களிடம் ஒப்படைத்தார்.

இப்பணி தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் மிகப் பெரிய விழாவாக நிகழ்ந்தது. ஆனால், இது கி.பி.1160இல் இரண்டாம் இராசராசன் காலத்தில்தான் நிறைவு பெற்றது. அதாவது, பதினோராவது

பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் திருநிறைச் செல்வன் கருவூர்த் தேவரின் தொடர் முயற்சியால் *முதலாம் இராசராசன் காலத்தில் துவக்கப்பட்ட சீவநெறித் திருமுறைகள் எனும் தொகுப்பு* முதலாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1012-1044), முதலாம் இராசாதிராசா காலத்திலும் (கி.பி.1018-1054), இரண்டாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1054-1068), வீர இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1063-1070), முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி.பி.1070-1120), விக்கிரம சோழன் காலத்திலும் (கி.பி.1118-1136), இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி.பி.1113-1150) வளர்ந்து; *இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1163) காலத்தில்தான் நிறைவு பெற்றது.*

அதாவது, கருவூர்த் தேவர் தமது தந்தையின் கனவையும், தமது தந்தையால் உருவாக்கப்பட்ட பேரரசனான முதலாம் இராசராசனின் கனவையும் நிறைவேற்றுவதற்காக நூற்றாண்டுகளுக்கு மேலாக உழைத்து கி.பி.1160இல் கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் 'பன்னிரு திருமுறைகள்' என்ற தலைப்பில் சீவநெறித் திருமுறைகள் அனைத்தையும் தொகுத்து நிறைவு செய்தார். அதாவது, தஞ்சைப் பெரிய கோயிலில் துவங்கிய தொகுப்புப் பணி கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் நிறைவு பெற்றது இங்கு நினைவு கூரத் தக்கது. திருமாலின் பெருமை கூறும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிவலிங்கச் சன்னிதியில் துவங்கி தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சத்திலிங்க சன்னிதியில் நிறைவு பெற்றது என்பதும்; சிவனின் பெருமை கூறும் 'பன்னிரு திருமுறைகள்' தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சத்திலிங்கச் சன்னதியில் துவங்கி, கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிவலிங்கச் சன்னதியில் நிறைவு பெற்றது என்பதேயாகும்.

ஏனெனில், மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காகத்தான் தஞ்சையில் உள்ள சத்திலிங்கக் கோயிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள சிவலிங்கக் கோயிலும் பொதிகைமலை நிலவறையிலிருந்து வெளிப்பட்ட பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களால்

கட்டப்பட்டன. அதாவது, இந்த இரண்டு கோயில்களையே மெய்யான இந்துமத மறுமலர்ச்சிப் பணிக்குரிய கைகளாகவும், கண்களாகவும் படைத்தார் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர். இவற்றின் மூலமே என்றென்றும் **மெய்யான இந்துமதத்திற்குக் கைகளாகவும், கண்களாகவும் விளங்கிடக் கூடிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், பன்னிரு திருமுறையும்** உருவாயின. இவற்றில் இராமானுஞ்சாச்சாரியாரால் *வைணவ மதம் என்றோர் பிரிவு ஏற்படுவதற்கு* ***முன்பே*** *உருவான ஒன்றே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*.

எனவே, மெய்யான இந்துமதத்தில் வைணவ மதத்திற்காக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், சைவமதத்திற்காகப் பன்னிரு திருமுறைகளும் என்று இரண்டு தனிப்பிரிவுகளாக இலக்கியங்கள் உருவானதாக யாரும் எண்ணத் தேவையில்லை. அப்படியே எண்ணினாலும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்குப் **பிறகுதான்** சைவத்திலிருந்து வைணவம் என்றோர் பிரிவு உண்டாயிற்று என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வீரசைவ மரபிற்குரிய இராமானுஞ்ச முதலியார் உருவாக்கிய திருமாலின் பத்திநெறித் தத்துவம்தான் வைணவ சமயம் என்று தனியாகப் பிரிந்ததே தவிர மெய்யான இந்துமதத்தில் அப்படிப்பட்ட பிரிவு இல்லை.

எனவேதான், இன்றைக்கு பதினோராம் பதினெண்சித்தர் பீடாதிபதியைப் போல் சத்தி இலிங்கக் கோயிலையும், சிவ இலிங்கக் கோயிலையும் மட்டும் புதிதாக உருவாக்காமல் ஏற்கனவே உள்ள அனைத்து வகையான கோயில்களையும் புத்துயிர்ப்புச் செய்து பயன்படுத்திக் கொள்ளும் திட்டமும்; கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் என்று நான்கு வகையான அருளுலக விதைப் பண்ணைகளையும், நாற்றுப் பண்ணைகளையும் உருவாக்கும் திட்டமும் செயலாக்கப் படுகின்றன பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களால்.

//உண்மை நகல்//

//மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்த நகல்//

# மெய்யான சித்தர் பாடல்கள்

## முன்னுரை

**'மெய்யான இந்துமதம்'**, **'பொய்யான ஹிந்துமதம்'** என்ற சொற்களை கி.மு. முதலாம் நூற்றுண்டில் செயல்பட்டிட்ட பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் பயன்படுத்திட ஆரம்பித்திட்டார்கள். இவர்தான் **'மெய்யான இந்துமதமும், பொய்யான ஹிந்துமதமும்'**; **'பதினெண்சித்தர்களின் சித்தர்நெறி எனும் சீவநெறி ஆகிய மெய்யான இந்துமதம்'**; **'பிறமண்ணினர்களான பிருமணரின் பொய்யான ஹிந்துமதம்'**; **'அண்டபேரண்டமாளும் மெய்யான இந்துமதம்'**; **'பிண்டத்தைக் கூட ஆளத் தெரியாத பொய்யான ஹிந்துமதம்'**; ... முதலிய தலைப்புக்களில் பல குறிப்புக்களையும், உரைநடை நூல்களையும், குருபாரம்பரிய வாசகங்களையும், ஆறு வகைப்பட்ட வாக்கு, ஆறு வகைப்பட்ட வாக்கியம், ஆறு வகைப்பட்ட வாசகம் முதலியவைகளையும் எழுதியுள்ளார். இவரைப் பின்பற்றித் தோன்றிய பதினெண்சித்தர் வகையைச் சேர்ந்த சித்தர்களும், 48 வகைச் சித்தர்களும், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களும் மெய்யான இந்துமதம் பற்றியும், பொய்யான ஹிந்துமதம் பற்றியும் பல கருத்துக்களை எழுதியுள்ளார்கள்; பல செய்திகளைத் தருகிறார்கள். அவற்றுள் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டாகக் காட்டியிருக்கிறோம். இக் குறிப்புக்களைப் போல் நிறைய குறிப்புக்கள் இருக்கின்றன என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

**ஞானாச்சாரியார்**
**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**
**பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்**
G.N.T.சாலை, காரனோடை, சென்னை-600067

**எழுதிய நாள்: 1/3/90**

# அழுகணிச் சித்தர் பாடல்

ஊத்தைச் சடலமடி என் கண்ணம்மா!
உப்பிருந்த பாண்டமடி என் கண்ணம்மா!
மாத்திப் பிறக்க வழியறியேனடி என் கண்ணம்மா!
மாத்திப் பிறக்கும் வழியறிந்தால் என் கண்ணம்மா!
உன்பாதம் ஓடிவந்து சேரேனோடி என் கண்ணம்மா!
பதினெண்சித்தரின் இந்துமதமடி என் கண்ணம்மா!
பிருமணரின் ஹிந்துமதமாச்சுதடி என் கண்ணம்மா!
உண்மை உரைத்தும் உணராரேடி என் கண்ணம்மா!
உணர்ந்து இந்துமத வழியறிந்தால் என் கண்ணம்மா!
உன்பாதம் ஓடிவந்து சேர்வாரடி என் கண்ணம்மா!

# கடுவெளிச் சித்தர்

பதினெண்சித்தர் இந்துமதத்திலே அருளூற்றோடுதடி
என் ஞானப்பெண்ணே!
அருளூற்றால் மனிதன் கடவுளாகிறானடி;
கடவுளும் மனிதனாகிறானடி என் ஞானப்பெண்ணே!
பதினெண்சித்தர் இந்துமதத்திலே எல்லாம் நடக்குதடி
என் ஞானப்பெண்ணே!
நடப்பன எல்லாமே நமக்கு நன்மையாகுதடி
என் ஞானப்பெண்ணே!

# குதம்பைச் சித்தர்

வானத்தில் மயிலாடக் கண்டேனடி குதம்பாய்!
மயில் குயிலாய் மாறுச்சடி குதம்பாய்!
வண்டமிழில் இந்துமதம் வாழுதடி குதம்பாய்!
ஹிந்துமதம் இந்துமதமாய் ஏற்கப் படுதடி குதம்பாய்!

# வெட்டவெளிச் சித்தர்

நமது சொந்தமதம் இந்துமதமென்று கும்மியடிடீ வாலைப் பெண்ணே!
இங்கு வந்தவர் மதமே ஹிந்துமதமென்று கும்மியடிடீ
வாலைப் பெண்ணே!

# சட்டைமுனி

பதினெண்சித்தர் பைந்தமிழில் தந்த மதமே
இந்துமதமென்று கும்மியடிடீ மோனப் பெண்ணே!
பிருமணர் சமசுக்கிருதத்தில் தந்த மதமே
ஹிந்துமதமென்று கும்மியடிடீ மோனப் பெண்ணே!

# பாம்பாட்டிச் சித்தர்

பதினெண்சித்தரின் அண்டபேரண்டமாளும்
மெய்யான இந்துமதம் கண்டே நீ ஆடுபாம்பே!
பிருமணரின் பிண்டமாள முடியாத
பொய்யான ஹிந்துமதம் கண்டே நீ சுழன்றுடு பாம்பே!

# அகப்பேய்ச் சித்தர்

கடவுள் தெய்வம் ஆண்டவர் மாண்டவர்
கூட்டிக் காட்டும் இந்துமதக் கூத்தாடு அகப்பேயே!
காற்று கருப்பு பேய் பிசாசு
கட்டி யோட்டாத ஹிந்துமதக் கூத்தாடு அகப்பேயே!

**எழுதப்பட்ட நாள்: 14/3/90**

## சித்தர் பாடல்கள் தொடர்ச்சி ...

1) "சில முட்டாப் பயலையெல்லாம் தாண்டவக் கோனே!
காசு முதலாளியாக்குதடா தாண்டவக் கோனே!
இந்துமத விரோதி துரோகிகளை யெல்லாம் தாண்டவக் கோனே!
ஹிந்துமதம் ஆச்சாரியாராய் பீடாதிபதியாய் ஆக்குதடா
தாண்டவக் கோனே!"

2) "இந்துமதத் தென்னையிலே தேங்காய் தேடாமலே
தாண்டவக் கோனே!
ஹிந்துமதத் தென்னை நிழலில் தேங்காய் தேடுதடா
தாண்டவக் கோனே!"

3) "குண்டலினிப் பாம்பைக் கொண்டைமுதல் கெண்டைவரை
அணிந்த சிவன்வழியே இந்துமதமென்று ஆடுபாம்பே!
இச்சிவனையும் சீவனற்றவனுக்கிச் செறிக்கும் ஹிந்துமதம்
அன்னியன் வழியே என்பது விளக்கி ஆடுபாம்பே!"

4) “வானத்தில் மயிலாடக் கண்டேனடி அக்கச்சி!
வையத்தில் ஹிந்துமதம் நம்பப் படுதடி அக்கச்சி!
காணும்போதே மயில் குயிலாச்சுதடி அக்கச்சி!
கருத்திருக்கும் போதே ஹிந்துமதம் இந்துமதமாய் ஏற்கப்படுதடி அக்கச்சி!”

5) “நட்ட கல்லும் நாதனுகிப் பேசுமடா இந்துமதத்திலே!
நட்ட கல்லும் நாதமுற்றுப் பேசுமோடா ஹிந்துமதத்திலே!
சுற்றிவந்து சொல்லப் பதினெண்வண்ணப் பூசாமொழி உண்டடா இந்துமதத்திலே!
சுற்றிவந்து சொல்ல மந்திரம் ஏதடா ஹிந்துமதத்திலே!”

6) “வெட்டவெளியே சதமென்று இருப்பாருக்குப் பட்டயங்கள் ஏதுக்கடி குதம்பாய்!
பட்டப்பகலிலே ஹிந்துமதத்தை இந்துமதமாய் நம்புபவர்க்கு பத்திநெறி ஏதுக்கடி குதம்பாய்!”

7) “ஹிந்துமதத்திலே மாட்டிக்கிட்டாலும் தாண்டவக்கோனே!
இந்துமதத்திலே கருத்தை வையடா தாண்டவக்கோனே!”

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: தலைமைப்பீடத்தில் இருந்த சித்தரடியான் சுந்தரராமன் கையெழுத்தில் இருந்தது.//**

# குண்டலினி மாயை

இன்றைக்கு நாட்டு நடப்பில் பல தனிமனிதர்களும், பல மத நிறுவனங்களும், சில மத நம்பிக்கை இல்லாத நிறுவன நிர்வாகங்களும் “குண்டலினி” என்ற பெயரை சொல்லிக் கொண்டு கருத்துக்களை வெளியிடுகிறார்கள், கட்டுரைகள் புத்தகங்கள் வெளியிடுகின்றார்கள், பயிற்சி நிலையங்கள், முகாம்கள் நடத்துகிறார்கள்.... இவை இந்துமத உணர்வு, இந்துமத அறிவு, இந்துமத ஈடுபாடு.... முதலியவை நாட்டில் கணிசமான அளவு விழிச்சியையும், எழிச்சியையும் பெற்றிருக்கின்றன என்பதை விளக்குகின்றன. இது மகிழ்ச்சிக்குரியதே, வரவேற்புக்குரியதே, பாராட்டுக்குரியதே ஆகும்! ஆகும்! ஆகும்!

ஆனால்! ஆனால்! ஆனால்! குண்டலினிப் பற்றி பேசுகிறவர்களும், குண்டலினி என்ற பெயரில் வாழுகின்ற (அ) செயல்படுகின்ற போதனையாளர்களும், மாணவர்களும்,..... சாதனையாளர்களாக மாறியிருக்கிறார்களா? மாறியிருக்கிறார்களா? மாறியிருக்கிறார்களா? .... மாறி வருகிறார்களா? மாறி வருகிறார்களா? மாறி வருகிறார்களா? .... என்ற கேள்விக்குறி அப்படியேதான் இருக்கிறது, இருக்கிறது, இருக்கிறது,

குண்டலினி சத்தி பெற்றவர்கள் (அ) பெறப் போகிறவர்கள் .... குண்டலினி என்றால் என்ன? அது எப்படி இருக்கும் அனுபவத்தில்? .... அதைப் பற்றி ஏட்டுலக செய்தி என்னென்ன .... அதைப்பற்றி நமது மூதாதையர்களான சித்தர்களும், தவசிகளும், முனிவர்களும், இருடிகளும், மகான்களும், ஞானிகளும், யோகிகளும், ஓகிகளும் ... என்னென்ன கூறியிருக்கிறார்கள்?

அவர்கள் கூறியுள்ளவைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கக் கூடிய விந்துவழி வாரிசுகளோ அல்லது கருவழி வாரிசுகளோ (அ) குருவழி வாரிசுகளோ இருக்கிறார்களா? .... இருந்தால் அவர்கள் நிலை என்ன?.... என்று ஆராயாமல்தான் இன்றைய குண்டலினி

அக்கறையாளர்கள், ஆர்வலர்கள் செயல்படுகிறுர்கள், செயல்பட்டுக் கொண்டேயிருக்கிருர்கள். எனவேதான் “குண்டலினி மாயை” என்ற தலைப்பு கொடுக்க வேண்டியுள்ளது.

இப்படி பிறர் மனம் புண்பட எழுத நேரிட்டிருப்பதற்கு காரணம், இன்றைய நாட்டு நடப்பில் குண்டலினி என்ற பெயரில் போதகராகவும், மாணவராகவும் வாழுகின்றவர்களுக்கிடையில் பெரும்பாலும் சிந்தை, நெஞ்சம், உணர்வு, உடல் .... முதலியவை அனைத்துமே பாதிப்புக்களைப் பெற்று உலகியலான வாழ்க்கையில் சிக்கல்களை தோற்றுவித்து விடுகின்றன. இதுதான் உண்மை!

உண்மை இப்படி இருந்த பொழுதிலும் குண்டலினி போதகரோ, மாணவரோ இந்த உண்மையை முழுமையாக உணர்ந்தாலும், வெளியில் கூற கூச்சப்பட்டுக் கொண்டு குழப்பத்திலும், துன்பத்திலும், தொல்லைகளிலும் உள்ளார்கள்.

அதாவது! அதாவது! அதாவது!.... குண்டலினியின் பெயரால் பரவலாகப் பலருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்த போதும்; அதை வெளியில் கூற முடியாமல் கூச்சத்தோடும், அச்சத்தோடும் வேதனையை அனுபவிக்கிருர்கள்! வேதனையை அனுபவிக்கிருர்கள்! வேதனையை அனுபவிக்கிருர்கள்!

ஆனுல்! ஆனுல்! ஆனுல்! இந்த வேதனையாளர்கள் எல்லாம், தங்களின் வேதனைகளையே சாதனையாக நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்களை எல்லாம் சிந்திக்கச் செய்வதற்காகத்தான் இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்து மதத்தின் முழுமுதல் ஆச்சாரியக் குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் தமது அருளுரைகளிலும், அறிவுரைகளிலும், அறிவார்ந்த அருளுரைகளிலும், அருளார்ந்த அறிவுரைகளிலும், **“இந்துவேதத்தின் சிறந்த போதனையும், இந்துமதத்தின் அரிய பெரிய சாதனையும் குண்டலினியாக, ஓகாசனமாக, யோகாசனமாக, சேவலோன் போர்க்கலைகளாக, அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் அருளப் பட்டுள்ளன. இவற்றை உரிய குருவழியாக முறையாகவும்,**

**நிறைவாகவும் ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் கற்றுத் தேறுவதுதான் நல்லது. இல்லையேல், இவை அனைத்துமே மாயையே ஆகிவிடும்"** என்ற அறிவிப்பு வழங்குகிறார்.

குண்ட**ழி**னி!? குண்ட**லி**னி!? குண்ட**ளி**னி!? என்ற மூன்றையும் வேறுபடுத்தி, விரிவு படுத்திக் கொள்கையளவில், கருத்தளவில் பிரித்து, வேறுபடுத்தி, விரிவாகத் தெரிந்த பிறகே, பிறருக்கு கற்றுக் கொடுக்க முற்படுவதும், பிறரிடம் கற்றுக் கொள்வதும் நிகழவேண்டும்!, நிகழவேண்டும்!, நிகழவேண்டும்!, நிகழ்த்தப்பட வேண்டும்!. எனவேதான்,

**<u>இருக்கு வேதம், காண்டம்: 5, மண்டலம்: 25, நாள் வாசகம்: 18.</u>**

*"குண்டழினி, குண்டலினி, குண்டளினி மாயைகளைக் கடந்தவர்களே போதகர்களாக இருந்து சாதகர்களை உருவாக்க வேண்டும். ஏனெனில் இக்குண்டலினி தொடர்பாகவே ஓகாசனம், யோகாசனம், சேவலோன் போர்க்கலைகள், தவம், பூசை, ஞானம் முதலிய அனைத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. எனவே, இந்துமதம் சிறப்பாக மானுடர்களுக்கு பயன்பெற வேண்டுமென்றால் குண்டலினியை நன்றாகத் தெரிந்து புரிந்து செயல்பட்டிடல் வேண்டும்."*

**<u>அசுரவேதம் காண்டம்: 18, மண்டலம்: 27, நாள் வாசகம்: 32</u>**

*"குண்டலினியை முறையாகப் பயிலாமல் பயிற்சி செய்தால் உடம்பின் சுவையுணர்வுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு விடும், உடலுறுப்புக்களின் ஆற்றலில் நலிவும், நோய்நிலைகளும் உருவாகும். இதைப் புரிந்து குண்டலினியை நெருங்க வேண்டும்."*

**<u>யாமவேதம் காண்டம்: 9, மண்டலம்: 16, நாள் வாசகம்: 36</u>**

*"குண்டழினி, குண்டலினி, குண்டளினி .... என்ற மூன்றுதான் அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம் என்ற மூன்றை தனித்தனி வேதங்களாக பிறப்பித்துள்ளன என்ற பேருண்மை தெரிந்தால்தான், புரிந்தால்தான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி ...*

*எனும் நான்கும் உரிய பயனைப் பெரிய அளவில் விளைவித்துத் தரும். அதாவது குடமுழுக்கு பூசையை செய்து வழிபாட்டுக்குரிய, பூசைக்குரிய, கும்பிடுதலுக்குரிய, வணங்குவதற்குரிய, தொழுகைக்குரிய, அழுகைக்குரிய, எள்ளலுக்குரிய, ஏசலுக்குரிய (எனும் எட்டு வகையான அருளுலக அணுகுமுறைகளுக்கும் உரிய) மூலவர்களுக்கு உயிர்ப்பையும், புத்துயிர்ப்பையும் செய்ய முடியும். தங்களுக்குள் தாங்களே கற்றல், நோற்றல், உற்றல், பெற்றல் என்ற நான்கும் வறுமையையோ, வெறுமையையோ அடைந்திடாமல் இருக்கும் படிச் செய்ய முடியும்."*

**<u>அதர்வான வேதம் காண்டம்:7, மண்டலம்:21, நாள்வாசகம்:42</u>**

*"அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம் படிக் கருப்புகளும், தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் குண்டழினி, குண்டலினி, குண்டளினி என்ற மூன்றுக்கும் செந்தமிழ் மொழிக்குரிய முன்னூற்று இருபத்து மூன்று (323) எழுத்துக்களிலும் தனித்தனி எழுத்துக்களை தேர்ந்தெடுத்து அறிவித்திருப்பதை, உடம்பில் உள்ள முப்பத்திரண்டு அங்கங்களிலும் இட்டும், தொட்டும், சுட்டியும் பதிவு செய்து கொண்ட பிறகுதான் பயிற்சியினை துவக்க வேண்டும். இல்லையேல், குண்டழினியும் மாயையே, குண்டலினியும் மாயையே, குண்டளினியும் மாயையே! ..."*

என்றிப்படி இந்துவேதத்தின் நான்கு வேதங்களும் மிகத் தெளிவாக குண்டலினி பற்றிக் கூறுவதால்தான், இம்மண்ணுலகுக்கு இந்துவேதத்தை அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும், இம்மண்ணுலகில் இந்துமதத்தை தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும், இம்மண்ணுலகின் பொருள்களும், பயிரினங்களும், உயிரினங்களும் உய்வு பெறுவதற்காக தரம், திரம், திறம் என்ற மூன்றையும் உடைய முத்தமிழ் மொழியினை, ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும் உருவாக்கும் ஆற்றலுடைய கருவாற்றல் மொழியினை,

குருவாற்றல் மொழியினே, தருவாற்றல் மொழியினே, திருவாற்றல் மொழியினே இம்மண்ணுலகுக்கு அருளிய செந்தமிழ் மொழியின் மெய்ஞ்ஞான சபையின் தலைவருமான அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார், குருமகாசன்னிதானம் இந்து வேதாகம பாடசாலையின் மூலமும், இந்துவேத முன்னேற்ற கழகத்தின் மூலமும் (I.M.I), இந்து விடுதலை சிங்கங்களின் சங்கம் மூலமும் (I.I.L.L.S.), அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் மூலம் (A.V.T.) ... நாடு முழுவதும் மக்களுக்கு அருளை அனுபவப் பொருளாக மருந்தாகவும், விருந்தாகவும் வழங்குகின்ற நான்கு வேத யாகசாலை அருட்கோட்டங்களின் மூலமும் அருட்கொடையாக வழங்குகிருர்.

எனவே, குண்டலினி மாயையால், ஓகாசன மாயை, தவ மாயை, ஞான மாயை, ... முதலிய மாயைகள் தோன்றி அல்லது தோற்றுவிக்கப் பட்டு இந்துமதத்தையே இந்துக்கள் மறக்கவும், துறக்கவும், மறுக்கவும், வெறுக்கவும், பகைக்கவும், நகைக்கவும் நேரிடும்படி ஆகி விட்டது. இதனுலேயே, இந்துக்கள் தங்களுடைய பல்வேறு வகையான சிக்கல்களுக்கும், பாதிப்புக்களுக்கும் பரிகாரம் தேடி மாற்று மதத்தவர்களிடம் செல்ல வேண்டிய நிலை உருவாகி விட்டது... மத மாற்றங்கள் நிகழ்வது கூட குண்டலினி மாயையால் என்று கூட குற்றம் சாட்டலாம்.

**//உண்மை நகல்//**

## //1994இல் வெளியாகிய இந்து ஆரணம் என்ற இதழுக்காக குருதேவர் அவர்களால் எழுதப் பட்ட கட்டுரை//

பின்குறிப்பு:- குண்டலினி, யோகாசனம், யோகம், ... என்ற பெயர்களில் பல கோடிக்கணக்கான ரூபாய் பொருளாதாரத்துடன் நிறுவனங்கள் நடக்கின்றன. அவற்றின் உண்மை சாதனை நிலை என்ன? அவற்றில் இணைந்தால் பெறும் வேதனையின் தன்மை என்னென்ன? என்பதை ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் **இந்துவேத நாயகமாக** இருந்து எழுதிய இந்தக் கட்டுரை விளக்குகின்றது.

தலைமைப்பீடம்
26.6.87

**அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத் தந்தை, கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குவலய குருபீடம், குருதேவர், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியவர்கள்,**

**சேரநாட்டு அருளாட்சிப் படையின் மாதண்டநாயகமாகிய அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் பழ.கோபால் [6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை P.O., கோவை] அவர்கள் சமூகத்திற்கு விடுக்கும் திருமுகம்.**

1) உலகியல் பயிற்சிகளிலும், முயற்சிகளிலும் தேர்ச்சி மிகுதியாகப் பெற்ற மெய்யான பத்திச் செல்வ! அருள் ஞான அமுதைப் பெறுவதற்குத் தேவர்களின் பரிந்துரை பெற்ற அருந்தவச் செல்வ!

ஆள்வினை, சூழ்வினை கடந்து ஊழ்வினையால் சித்தரடியானாகத் தொடர்ந்து செயல்பட்டுச் சேரநாட்டு அருட்படையில் மாதண்ட நாயகமாக இருக்கின்ற பேராற்றல் மிக்க நண்பா! தங்களைத் தாங்கள் புரிந்து கொள்ள விண்ணுலகத் தேவதேவியின் கருத்தாழமிக்க இரு திருவோலைகள் முறையே தங்களின் துணைவியாருக்கும், திருநிறைச் செல்விக்கும் அனுப்பப் பட்டிருக்கின்றன. யாவும் நலமாகட்டும், இனிதாகட்டும், அருளாட்சிப் பணிக்கு பேருதவியாக அமையட்டும்.

2) நண்ப! பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் வாழ்வதற்கென்று குறிப்பிட்ட குகையோ, கூடோ, புதரோ, காடோ, ... இருக்கின்றன. அதுபோல, ஆறறிவு படைத்த மனிதனுக்கு இனவுணர்வு, மொழியுணர்வு, நாட்டுணர்வு என்ற முக்கோணக் கோட்டை வலுவாக உள்ள வீடும், வீடு சேர்ந்த நாடும் இருப்பதுதான் உலக வழக்கு. ஆனால், தமிழனுக்கு மட்டும் இது பொருந்துவதாக இல்லை.

ஆறேழு கோடி மக்கள் உள்ள தமிழினத்துக்கு மட்டும் நாடில்லை, நாடு சார்ந்த மொழியுரிமை இல்லை, இன உரிமை இல்லை. இதுபற்றி அவர்களில் பெரும்பாலானவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை, எண்ணிப் பார்ப்பதேயில்லை, எண்ணிப் பார்ப்பதேயில்லை. எண்ணிப் பார்க்க முற்படுகின்ற சிறுசிறு கூட்டத்தார்களும் அவ்வப்போது தோன்றிடக் கூடிய தன்னல வெறிபிடித்த, தத்துவ அறிவற்ற, நல்ல பாரம்பரிய உணர்வற்ற, மெய்யான நாட்டுப்பற்றோ, மொழிப்பற்றோ அற்ற, ... இழிந்தவர்களாக இருந்திடுகின்றார்கள்.

எனவேதான், இந்தக் கலியுகத்தைப் பொறுத்தவரை எமக்கு முன் தோன்றிய இரு பெரும் பீடாதிபதிகளாகிய பத்தாவது, பதினோராவது பீடாதிபதிகளின் செயற்கரிய பெரிய செயல்கள் பருவமழையால் முளைத்துக் கிளைக்கும் பயிரினங்கள் போல் தமிழ் நாட்டுணர்வு, மொழியுணர்வு, இனவுணர்வு முதலியவற்றிற்காக முளைத்துக் கிளைத்த பேரரசுகளும், சிற்றரசுகளும், அருந்திறன் மிக்க வேந்தர்களும், மன்னர்களும், அரசர்களும், அமைச்சர்களும், தளபதிகளும், கவிகளும், புலவர்களும், அறிஞர்களும், கலைஞர்களும், தலைவர்களும், இவர்களைச் சார்ந்த இயக்கங்களும் முறையாகப் பேணுவாரின்றி அன்னியர்களாலும், தமிழினத் துரோகிகளாலும், விரோதிகளாலும் விரைந்து சிதைக்கப் பட்டும், அழிக்கப் பட்டும் விட்டார்கள். எனவேதான், தமிழினம் கனவுப் பொருளாக, பழங்கதைக்குரியதாக, புராணமாக, பாழடைந்த மண்டபங்களாக, நிலவறைப் புதையல்களாக, செல்லரித்த ஏட்டுச் சுவடிகளின் சிதைந்த கவிதைகளாக, ... இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது. இதனை மாற்ற நினைக்கின்ற அனைவருக்குமே ஏமாற்றம்தான் கிடைத்திடுகின்றது.

இனிய நண்பனே! இனிய நண்பனே! இனிய நண்பனே! இந்தச் சோக வரலாற்றில் மாற்றம் ஏற்படுத்த நினைத்த சிந்தனைச் சிங்கத்தின் வாரிசே யாம்!; சிந்தனைச் சிற்பியால் உருவாக்கப்பட்ட கலைக் கருவூலமே யாம்!; மகாகவியால் பாடி முடிக்கப்பட்ட வீரகாவியமே யாம்!; அந்த மாமேதையின் தத்துவ வாரிசே யாம்!; .... எமக்குதவ

முன்வந்துள்ள இனிய நண்ப! உம்மை வாழ்த்துகிறோம். அதாவது, எம்மை ஓரளவு புரிந்த அளவிலேயே தாங்கள் எமக்குதவ பெருமளவு முன்வந்ததிற்கு நன்றி! நன்றி! நன்றி! தங்களைப் போன்றுதான் தமிழகத்தின் நாடு நகரங்களின் மூலைகளிலெல்லாம் இருந்தும்; பேரூர், சிற்றூர், கிராமம், குக்கிராமம், பட்டிதொட்டி, களத்து வீடு, தோட்டத்து வீடு, ... முதலிய அனைத்து இடங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் எமக்குதவிட தாராளமாக முன்வந்து கொண்டிருக்கிறார்கள். இப் பேருண்மையினை எமது அண்மைக் காலச் சேலம் சுற்றுப்பயணம்தான் விளக்கிற்று. எனவேதான், அவசர அவசியமாகத் தங்களுக்கு இந்த அஞ்சலை எழுதுகின்றோம். ஏனெனில், <u>தாங்கள் தங்களுக்கு ஏற்பட்டு விட்ட அல்லது ஏற்பட்டு வருகின்ற தோல்விகளுக்கும், துரோகிகளின் தொல்லைகளுக்கும், விரோதிகளின் சூழ்ச்சிகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் கலங்கத் தேவையில்லை. கலங்கத் தேவையில்லை, கலங்கத் தேவையில்லை</u>.

**இதுவரை வெளிவந்துள்ள நமது 38 (முப்பத்தெட்டு) 'குருதேவர்' அறிக்கைகளையும், நமது கொள்கை விளக்கம், இந்துமத விளக்கம், அருளுலக ஆட்சிமொழி, தாத்தா தஞ்சைக் கருவூரார் வரலாறு, சித்தர்கள் வரலாறு, சித்தர் நெறி விளக்கம், பெரியார் பற்றிய விளக்கம், பூசைமொழி, பூசாவிதி, அ.வி.தி. செயல்நிலை விளக்கம், அச்சேறாத நூற்றுக்கணக்கான கட்டுரைகள், அஞ்சல்கள் முதலியவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு சேலம் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்லுங்கள். இவற்றைப் பலருக்கும் படிக்கத் தாருங்கள்; எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடம் இவற்றைப் படித்துணர்ந்தவற்றின் சாரத்தை விளக்கிக் கூறுங்கள்; கோயில் ஊழியக் காரர்களை யெல்லாம் சந்தியுங்கள்; பத்திநெறியில் ஈடுபாடு உள்ளவர்கள் அனைவரையும் சந்தியுங்கள்; உங்களுடைய உழைப்புக்கேற்ற வெற்றி உறுதியாகக் கிடைக்கும்.** சேர மண்டலத்தில் ஒரு பகுதியான சேலம் மாவட்டத்திற்குச் சென்று அன்பு கூர்ந்து மாவட்டச் செயலகமாக இருக்கின்ற தருகுலம் வேம்படிதாளம் சென்று மாவட்டச் செயல்வீரர்களான சீ.மணி, இரா.வெங்கடேசன்,

இல.க.கணேசன், சீ.பத்தவச்சலம், மாட்டுவேலம்பட்டி சு.ஞானசேகரன், சு.குழந்தைவேலு, வெள்ளைப் பிள்ளையார் கோயில் சுந்தரவடிவேலு, கலைச்செல்வன், கடந்தபட்டி ஏகாம்பரம், இராசிபுரம் இர.கங்காதர குமார், கு.இராசமாணிக்கம், நாமக்கல் பொன்னுசாமி முதலிய பலரையும் சந்தித்துக் கலந்துரையாடி செயல்திட்டம் வகுத்துச் செயல்படுங்கள்.

சேலம் மாவட்டமும், கோவை மாவட்டமும் இணைந்து சேரமண்டலத்தின் அருளாட்சிப் படையைப் பெரியதாக்கட்டும். பாடிவீடுகளும், பாசறைகளும் எண்ணிக்கையில் மிகுதியாகட்டும். அ.வி.தி.யும், இ.ம.இ.யும் தமிழின விழிச்சிக்கும், எழிச்சிக்கும், செழிச்சிக்கும் பாடுபடும் இரு கைகளாகட்டும். நமது பத்திநெறி வாசக முழக்கங்களும், அருளூறு பாடல் ஒலிகளும் அனைவரையும் தட்டியெழுப்பும் போர்ப்பரணியாகட்டும். போர் முழக்கமாகட்டும், போர் முரசொலியாகட்டும். அனைவருடைய அக இருளும், புற இருளும் அகலட்டும். எங்கும் எதிலும் அன்பு தழைக்கட்டும். பற்றும் பாசமும் ஒற்றுமையும் செழிக்கட்டும். அமைதியும் நிம்மதியும் நிறைவும் மலரட்டும். ஆவி ஆன்மா ஆருயிர் மூன்றும் ஒன்றுகட்டும். குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்காவது முற்பிறப்பும், மறுபிறப்பும், இப்பிறப்பும் புரியட்டும். விண்ணையும் மண்ணையும் இணைக்கும் அருளாட்சி அமைக்கும் பணி வெற்றியாகட்டும். உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகட்டும். நமது தத்துவத்தின் வெற்றியின் அடிப்படையில் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்போம்.

3) நண்ப! விண்ணையும் மண்ணையும் ஆளும் பதினெண்சித்தர்களின் சீவநெறியான சித்தர் நெறியான இந்துமதம் தவிர்க்க முடியாத காரணங்களால் **'<u>மெய்யான இந்துமதம்</u>'** என்று குறிப்பிட வேண்டிய அவசியத்திற்குள்ளாகி விட்டது. இதில் அருவமாய், உருவமாய், அருவுருவமாய், மானுடராய் வாழும் பெண்கள் கடவுள்களாக, தெய்வங்களாக, தேவதைகளாக ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்து உரிய முறையில் தேவையான போது பக்குவமாய்ப் பயன்படுத்தப்

பட்டு மிகப்பெரிய சத்திகளாக விளங்கும் தத்துவம்தான் அடிப்படையாகும். எனவேதான், கடந்த 500 கோடியாண்டுகளில் இந்துமதத் தந்தையின் பொறுப்பில் இருக்கும் பதினெண்சித்தர் பீடத்தின் வாரிசாகத் தோன்றியிருக்கும் யாமும் பெண்களிடமே இந்துமதத்தின் பேருண்மைகளையும், அரிய பெரிய செயல்திட்டங்களையும், அவற்றின் சத்திநிலைகளையும், சித்திநிலைகளையும் ஒப்படைத்து வருகிறோம்.

இந்த மரபு தொன்று தொட்டு வருவது போலவே; யாம், உருவாக்கிய ஆண்களில் தோல்விக்கும், துரோகத்திற்கும், விரோதத்திற்கும், சந்தர்ப்பவாத விலகலுக்கும் உள்ளானவர்களின் பட்டியல் மிகமிக நீண்டுகொண்டே போகிறது. ஆனால், இப்படிப்பட்டவர்கள் யாம் உருவாக்கிய பெண்களில் விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவுக்குத்தான் மிகமிகச் சிலராக இருக்கிறார்கள். அதுவும் இவர்களில் யாருமே எமக்கோ, எமது பாரம்பரியத் தத்துவங்களுக்கோ, செயல் சித்தாந்தங்களுக்கோ வெளிப்படையாகத் தீங்கு விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறவே முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. எனவே, தாங்களும் தங்களைப் போன்றவர்களும் மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியாக, செயல்சத்தியாக, இயக்க வடிவமாகப் பெண்களின் அணியே அமைந்திட முடியும் என்பதை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படுங்கள். நம் நாட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும், இயக்க நிலைகளும் வான்மகள், மலைமகள், அலைமகள், கலைமகள், நிலமகள், சத்தி, ஆதிசத்தி, அனாதிசத்தி, பாதிசத்தி, மீதிசத்தி, ... என்று மெய்யான பெண்மைநிலையில்தான் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்; மற்றவர்களுக்கும் உணர்த்துங்கள்.

4) நண்ப! அண்டபேரண்டமாளத் தோன்றும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் இன்றைய நிலையைச் சற்றே எண்ணிப் பாருங்கள். இம்மண்ணுலகின் மாபெரும் படிப்பாளியும், சிந்தனையாளரும், பகுத்தறிவு மேதையும், அரசியல் வித்தகரும், தத்துவ ஞானியும், மாவீரருமான எந்தையே உலகியலுக்குப் பயந்து எம்மை இந்த உலகியல்

ஆபத்துக்களிலிருந்து காப்பாற்ற நவநஞ்சுகளேயே எமக்கு உணவாக்கி வளர்த்திட்டார். அழிவுக்குரிய அனைத்து வகையான தற்காப்புக் கலைகளையும், தாக்கும் கலைகளையும், மற்ற போர்க்கலைகளையும், அழிவுக் கலைகளையும்.... அளவிறந்து கற்றுக் கொடுத்திட்டார். இருந்தும் எம்மால் எதிர்பார்த்த பாதுகாப்புக்களைப் பெற முடியவில்லை. வெற்றிகளைச் சாதிக்க முடியவில்லை. இருந்தாலும், எமது கடமையை நிதானமாகவும், சமாதானமாகவும் தொடர்ந்து செய்து வருகிறோம். இந்த நிலையில் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் இலக்கிய பாரம்பரிய வாசகங்களைக் கூறி இவ்வஞ்சலை நிறைவு செய்ய விரும்புகிறோம்.

## பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் இலக்கிய பாரம்பரியம்:

"ஒவ்வொரு மனிதனும் தன்னால் செய்யக்கூடிய செயல்களிலேயே உயர்ந்த செயலை, சிறந்த செயலை, பிறர் செய்ய முடியாத செயலைத் தேர்ந்தெடுத்துச் செய்து முடிப்பதில்தான் தன் வாழ்வைச் செலவழிக்க வேண்டும். ஆனால், அவன் வெற்றி தோல்விகளைப் பற்றியோ!; புகழ் இகழ் பற்றியோ!; ஈட்டம் இழப்பு பற்றியோ!; இன்பம் துன்பம் பற்றியோ!; எதிர்ப்பு ஆதரவு பற்றியோ!; பகை நகைப்புப் பற்றியோ!; ... சிந்திக்காமல் எதையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும், தயாராக இருக்க வேண்டும், தயாராக இருக்க வேண்டும். அதாவது எவனும் எக்காரணத்தை முன்னிட்டும் சோம்பலாலோ, அசட்டையாலோ, அயர்ச்சியாலோ தன்னால் ஆற்றக் கூடிய பணிகளை ஆற்றாமலிருக்கக் கூடாது. அதாவது, அருளுலக வாழ்வால் பொருளுலக வாழ்வியல் கடமைகளைப் புறக்கணிக்கக் கூடாது. இதேபோல், பொருளுலக வாழ்வியல் ஆசைகளால் அருளுலக ஈடுபாடுகளைக் குறைத்துக் கொள்ளக் கூடாது.

யாம், தமிழினத்திற்கென்றும், தமிழ்மொழிக்கென்றும் ஒரு பேரரசை உருவாக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டோம். அதனுல்தான், பதினெண்சித்தர்களின் சீவநெறியெனும் சித்தர் நெறியான உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுத் தத்துவமான இந்துமதத்திற்கென ஓர் அருட்பேரரசை உருவாக்க முடிந்தது. ஆனுல், அந்த அருட்பேரரசுக்காக உருவாக்கிய அரசகுலத்தை முறையான, நெறியான, இந்துமத அருளாளர்களாகவும், தமிழ்மொழிப் பற்றுளர்களாகவும் உருவாக்கும் பணியில் போதிய கருத்தையும், முயற்சியையும் செலுத்தத் தவறி விட்டோம். வட ஆரியப் புல்லுருவிகள் அருட்பேரரசின் அரசகுலம் எனும் பழமரத்தைப் பாழாக்கி விட்டனவே .......

“எமது தோல்வி எமது வாரிசுகளுக்கு ஒரு நல்ல பாடமாகட்டும். இந்துமத வழிப் புரட்சியைப் பாரதப் போர் போல் நிகழ்த்திஞல்தான் ‘இந்து மறுமலர்ச்சி’ ஏற்படும். அதனுல், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்க முடியும்; உலகம் முழுவதும் இந்துத் தத்துவப் பேரரசு அமைக்க முடியும்; உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகிடும். இம்மண்ணுலகில் மதவழிப் புரட்சியால் மனித ஒற்றுமை விளைந்திடும் .....”

**- அன்பு**
**நிறையக்ஞர்**
**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**26/1/87**

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: சித்தரடியான் இரா.சீனிவாசன், சித்தரடியார் சுந்தரானந்தா ஆகிய இருவரின் கையெழுத்தில் இருந்தது.//

20/7/85
செம்பியம்
சென்னை-11

# கையெழுத்துப் பிறதி நூலக அமைப்புக் குருவாணை

1) வன்ம ஆண்டு ஆடித் திங்கள் 5ஆம் நாள் சனிக்கிழமை கோவில்பட்டி இரமேசு B.E.க்கும் (27, வக்கீல் தெரு, கோவில்பட்டி 627710), இவரது நண்பர்களான இரமேசு, மகாதேவனுக்கும் அருட்பட்டங்கள் வழங்கி கையெழுத்துப் பிறதி நூலகம் அமைப்பதற்காகப் பல கட்டுரைகள் அனுப்பப் படுகின்றன. இதேபோல், சிறுமுகை இராமசாமி (s/o இரங்கசாமி கவுண்டர், 6/446 திருவள்ளுவர் நகர், சிறுமுகை, கோவை 641302) அவர்களுக்கும் பல நகல்கள் அனுப்பப் படுகின்றன.

2) இவர்கள் பொருளாதார வசதிக்கேற்ப டைப் அடித்தோ, சைக்குலோசுடைல் அடித்தோ, கார்பன் பேப்பர் வைத்தோ நகல்கள் தயாரிக்குமாறு குருவாணை இடப்படுகிறது. நகல்களின் கீழே, நகலெடுத்தவர்களின் அருட்பட்டங்கள், பெயர், முகவரி தெளிவாக இருக்க வேண்டும்.

3) இரண்டிரண்டு நகல்களாக தயாரிக்கத் தயாரிக்க சென்னை குருதேவர் முகவரிக்கு அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

4) இப்பொழுது அனுப்பி யிருக்கும் நகல்களை ஒரு கோப்பில் அழகாகக் கோர்த்து வைத்துப் பலருக்கும் படிக்கத் தர வேண்டும். ஆனால், பத்திரமாக வீட்டிலேயே வைத்துக் கொண்டுதான் வருபவர்களுக்குப் படிக்கத் தர வேண்டும்.

**5) யார் விரும்பினாலும் நமது நூலகத்திலுள்ள கட்டுரைகளுக்கு நகல் எழுதிச் செல்லலாம். நாம் இலக்கியப் புரட்சி, கருத்துப்**

**புரட்சி, சிந்தனைப் புரட்சி, எண்ணப் புரட்சி, உணர்வுப் புரட்சி, சமுதாயப் புரட்சி, சமயப் புரட்சி, கலைப் புரட்சி, .... முதலிய அனைத்தையும் அன்பு வழியில், அமைதி வழியில், அறவழியில், அருள் வழியில், சமாதான வழியில், சமத்துவ வழியில், சகோதரத் தத்துவ வழியில், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டு வழியில்.... ஆற்றவே விரும்புகிறோம். நம்மிடம் பொருளாதார வசதியில்லாததால் கையெழுத்துப் பிறதிகளாகத்தான் நமது செய்திகளையும், சிந்தனைகளையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் பரப்ப வேண்டியிருக்கிறது, பரப்ப வேண்டியிருக்கிறது, பரப்ப வேண்டியிருக்கிறது. இவற்றைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுங்கள். பலரையும் செயல்படச் செய்யுங்கள். தனிமரங்களாக இல்லாமல், ஒவ்வொருவரும் ஒரு தோப்பாக மாற முற்படுங்கள். பலரையும் இணைத்துப் பிணைத்துச் செயல்படுக! செயல்படுக! செயல்படுக! அதாவது, அருளை மட்டும் வழங்கி மதத்தால் இருளையும் இன்னல்களையும் வளர்க்காமல் அறிவையும் வழங்க வேண்டும், வழங்க வேண்டும், வழங்க வேண்டும்.**

6) நம்மவர்கள் முழுநேரமும் சிவப்பு ஆடையை அணியக் கூடிய துணிவைப் பெற வேண்டும். மந்திர மந்தரங்களைப் பயிற்சி செய்ய வேண்டும். மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களை குருவின் பதிலியாக நினைத்துச் செயல்பட வேண்டும்.

7) குருவாணைக்குக் கட்டுப்பட்டு உடனுக்குடன் குருவாணையைச் செயலாக்க முற்பட வேண்டும். அதாவது, நாம் ஒரு மாபெரும் உலக இயக்கம் என்ற உணர்வோடு ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். நாம் கண்மூடித் தனமான பூசாறிக் கூட்டமல்ல. சுரண்டல் கார மந்திறவாதிக் கூட்டமுமல்ல. அருளுலகில் பொதுவுடமையையும், சமத்துவத்தையும், கூட்டுடமையையும் வழங்கும் மாபெரும் பதினெண்

<u>சித்தர்களின் வாரிசுகள் என்று ஒவ்வொருவரும் நம்பிச் செயல்பட வேண்டும்.</u>

## ஏழு கட்டளைகள்

**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**20/7/85**

//உண்மை நகல்//

மூல நகல் எழுதியது: அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலேக் காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தர் வாரிசு, சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc. (S/O C.M. செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயிலருகில், வேம்படிதாளம், சேலம் மாவட்டம் 637504)

## சென்ற மாத வெளியீட்டில் <u>நேர்ந்த பிழைக்கு வருந்துகிறோம்.</u>

43,73,115ஆம் ஆண்டு ஆவணி மாத இதழில் 15ஆம் பக்கத்தில் உள்ள உகங்களின் ஆண்டுக் கணக்கில் இரண்டாவதாகிய தீரன் உகம் ஆண்டுக் கணக்கு 12,**<u>90</u>**,000 என்று இருக்க வேண்டும். தவறுதலாக அது 12,96,000 ஆண்டுகள் என்று கொடுக்கப் பட்டு விட்டது. அன்பு கூர்ந்து திருத்திப் படிக்கவும்.

ஓம்

# செயல்நிலைத் திருத்த எச்சரிக்கைக் குருவாணை

1) 27.6.85இல் ஞாலகுரு, தலைவர், குருதேவர் இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி விடுக்கும் செயல்நிலைத் திருத்த எச்சரிக்கை குருவாணை.

2) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அருளாட்சி அமைப்புப் பணியின் விரிவும், விரைவும், நுட்பதிட்பக் கட்டமைப்பும் கருதி அனைத்து ஆயாக்களிடமும், அப்பன்களிடமும், அம்மையப்பன்களிடமும், தேவகுமார குமாரிகளிடமும், கருவறை மூலவர்களிடமும் உதவி விண்ணப்ப வேண்டுகோள் பூசைகள் செய்யப்படுகின்றன. நண்பகலிலேயே அருவ உருவ அருவுருவங்கள் கண்ணுக்கும், காட்சிக்கும், ஞானக்காட்சிக்கும் தெரிந்து உதவிகளும், ஏந்துகளும், பாதுகாப்புக்களும், பிற அருளாற்றல்களும் தர ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, அ.வி.தி. பணியாளர்கள் பொறுப்பாகவும், பொறுமையாகவும் வாக்குறுதி வழங்குவதற்கேற்ப உரிய இடங்களுக்குச் சென்று பணிபுரிந்தேயாக வேண்டும். **“பருவம் தவறிப் பெய்த மழையும், பட்டம் தவறி விதைத்த விளைச்சலும், வாக்களித்தபடி மக்களைச் சந்தித்து ஆற்றாத அருட்பணியும் பயனற்றவையே”** - ***கருவாக்கியம், குருவாக்கியம், குருபாரம்பரிய வாசகம்***. இதனைப் புரிந்தும், புரியவைத்தும் செயல்படுக!

குறிப்பு:-

(அ) சித்தர் மகன் மதுரை ஆலவாய்மூதூர் தத்தனேரி பெரி.முத்தையா வாக்களித்தபடி காரைக்குடி, தஞ்சாவூர், திருச்சி, வ.ஆ.மா. வேலூர் ... முதலிய ஊர்களுக்கு உரிய காலத்தில் செல்லாததால் மிகப் பெரிய ஏமாற்றம், வெறுப்பு, அயர்வு, நம்பிக்கை, எரிச்சல், குறைமனம், ... உருவாகியுள்ளன. இவற்றை நீக்குவது எளிதா???

(ஆ) சித்தர் மகன் தெய்வீகாச்சாரியார் சரியான திட்டமில்லாமல் முசிறி பன்னீர்செல்வத்தையும், அவ்வட்டார மக்களையும் 24, 25 தேதிகளில் தமது வரவை எதிர்பார்க்குமாறு கூறிவிட்டு ஏமாற்றம் வழங்கியது கசப்பையும், அதிர்ச்சியையும் அயர்ச்சியையும், குறையையும் ... பெரிய

அளவில் ஏற்படுத்தியுள்ளது. மிகமிக வருந்துகிறோம், கடுமையாகக் கண்டிக்கிறோம். இப்படிப்பட்ட முறைகேடான, குறைகள் மிகுந்த, தவறான அருட்பணி ஆற்றுவதை விட அவர் தலைமைப் பணியாளராகச் செயல்படுவதே நல்லது. அவருக்கும், அ.வி.தி. சுற்றுப்பயணத்துக்கும் இராசியில்லை, யோகமில்லை! எச்சரிக்கை. அடுத்த தவறு நிகழ்ந்தால் உடனே சென்னை திரும்பவே ஆணை வரும். கடுமையாகக் கண்டிக்கிறோம். எச்சரிக்கை! வருந்துகிறோம்! ...

3) **'கையெழுத்து நூலகம்' [The MANUSCRIPT LIBRARY]:**

குருகுல அ.வி.தி. மையம், மதுரை அ.வி.தி. மையம், சென்னை அ.வி.தி. மையம், வ.ஆ.மா. வேலூர் அ.வி.தி. மையம், சேலம் வேம்படிதாளம் அ.வி.தி. மையம், தஞ்சை அ.வி.தி. மையம், திருச்சி முசிறி அ.வி.தி. மையம், கோயம்புத்தூர் சிறுமுகை அ.வி.தி. மையம், காரைக்குடி அ.வி.தி. மையம், திருச்சி அ.வி.தி. மையம், திருநெல்வேலி அ.வி.தி. மையம், தலைமைப் பொறுப்பகம், பொன்னேரி, என்று **கையெழுத்துப் பிறதிகளின் தொகுப்பு நூலகங்களைப் பன்னிரண்டு இடங்களில் அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது வரலாறு, இலக்கியம், தத்துவம், சித்தாந்தம், குறிக்கோள், கொள்கை, நெறிமுறை, சாதனை, ... முதலியவைகளை ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், *ஆய்வாளர்கள்,* ... முதலியோர் வந்து படித்தறியவும், நமது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் ... முதலியோர் படித்துச் சிந்தை வளமும், நெஞ்சத் தெளிவும், உணர்வு வலிவும், செயல்பொலிவும், ஊசலாட்டமற்ற உரமான போக்கும், தமிழின உணர்வு ஊற்றெடுக்கும் தரமான நோக்கும் பெற்றிடவும் ... வசதி வாய்ப்புக்கள் ஏற்பட்டிடும்.**

4) இதன்படி அவரவர் தங்களிடமுள்ள அஞ்சல்கள், கட்டுரைகள், ... முதலியவைகளுக்குப் பன்னிரண்டு (12) நகல்கள் [1+1=2x6 = 12 நகல்கள்; அல்லது Photostat Copies, Xerox எடுக்கலாம்] தயாரித்துக் கோப்பாகக் கட்டி; நகலெடுத்தவர்களின் பெயர், முழு முகவரி, வயது, பணி, அருட்பட்டங்கள், ... முதலியவைகளைக் குறித்து அனுப்ப வேண்டும். **இதில் குருதேவர் எழுதிய சொந்தச்**

**சேதியஞ்சல்களும் இடம் பெறலாம்.** அப்பொழுதுதான் நமது இயக்கமெனும் மாளிகையின் தூண்களேயும், அருட்பயிர் விளேவிக்கும் உழவர்களேயும், அருளுலக இருளகற்றும் பணி வீரர்களேயும், வீராங்கனேகளேயும் ... வரலாற்று நாயகர்களாக்கும் பணி நிறைவு பெறும்! நிறைவு பெறும்! நிறைவு பெறும்! புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

குறிப்பு:- பொருள்வளம் நம்மில் அதிகமில்லாததால் நம்மிடம் ***நலம் பெற வரும் நோயாளிகளேயும், நண்பர்களேயும், ஓய்வுள்ள சித்தர் நெறியாளர்களேயும் நகலெடுக்கும் பணியில் திருத்தொண்டாக, பூசையாக, தவமாக, குருகாணிக்கையாக, ... நகலெடுத்துத் தருமாறு*** வேண்டிக் கொள்ளுங்கள்.

5) கட்டாயமாக ரூ.1.00 பெற்று அ.வி.தி. உறுப்பினர்களாகச் சேர்ந்த பிறகே மக்களுக்கு அ.வி.தி. பணியாற்றுங்கள். வசதிப்படி ரூ.5.00 அல்லது ரூ.10.00 குருதேவர் பழைய ஏடுகளுக்காக வாங்குக. நம்மிடம் 1984ஆம் ஆண்டுக் குருதேவர் [ஏடுகள்] மீதமுள்ளது கட்டாயமாக விற்பனே செய்தேயாக வேண்டும். அ.வி.தி. மையங்களிலும், பயணங்களிலும், கோயில் நுழைவுகளிலும் நமது ஏடுகள் **விற்பனே** செய்யப் பட்டேயாக வேண்டும்.

**சித்தர் காகபுசுண்டர் காக்கையர் காக்காவழியன் பண்ணேயாடி திருவோலக்க அறிவுரைகளே இந்த ஐந்து செயல்திட்டக் கருத்து மடல். இதன் நகலேயும், இதற்குரிய அருளாட்சித் தாக்கீதையும், திருமந்திற ஓலேநாயகம் சேவுகன் வழங்க இதுவே குருவாணே.**

அன்பு

ஞாலகுரு

27/6/85

நகலெடுத்தவர்: அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலேக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc., DTVT (S/O C.M. செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோவிலருகில், வேம்படிதாளம், சேலம்-637504)

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'

**காலம்:** பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்

**இந்துமத நூல்கள்:** 108 பூசை மொழி நூல்கள்,
48 பூசைவிதி நூல்கள்
96 தத்துவ நூல்கள்
144 செயல் சித்தாந்த நூல்கள்
36 குருபீட நூல்கள்

ஆக மொத்தம் 432 நூல்கள்

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

***இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்***

***அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.***

***அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.***

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்

தமிழே கடவுள் மொழி! தெய்வ மொழி!, தேவ மொழி!, வேத மொழி!



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com